# உதயன்

சுடர் : 37 கதிர் : 356
வியாழக்கிழமை 17 நவம்பர் 2022
கார்த்திகை 01 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053
பக்கங்கள்: 12 விலை : ரூ. 50


## மீனவர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், நவ.17
மீன்பிடிக்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம், 11

வடக்கு - கிழக்கில்

# மக்களின் காணிகளை சுவீகரிக்க அனுமதியேன்!

சொல்கிறார் ரணில்



கொழும்பு, நவம்பர் 17

வடக்கு - கிழக்கில் மக்களின் காணிகள் அவர்களுக்கே சொந்தம். அவற்றை எவரும் ஆக்கிரமித்து வைக்கவோ அவற்றை எவரும் சுவீகரிக்க முயற்சிக்கவோ நான் இட மளிக்கமாட்டேன். மக்களின் சம்மதமின்றி சுவீகரிக்கப் பட்டு இன்னமும் விடுவிக் கப்படாமல் இருக்கின்ற காணிகளைப் படிப்படியாக விடுவிக்க நடவடிக்கை எடுப்பேன் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார். 11

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில்

## முதலாம்வருட மாணவர் திடீரென உயிரிழப்பு

வவுனியா, நவ.17
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் முதலாம் வருட ஆசிரிய மாணவன் ஒருவர் நேற்று இரவு திடீரென உயிரிழந்துள்ளார். 11



## மக்களின் காணிகளைச் சுவீகரிக்க வட்டுவாகலில் மீண்டும் முயற்சி

பொதுமக்கள் திரண்டு போராட்டம்
காணிகளை விடுவிக்க வலியுறுத்து

முல்லைத்தீவு, நவ.17
முல்லைத்தீவு, வட்டுவாகலில் உள்ள கோத்தாபய கடற்படை முகாமுக்காக பொதுமக்களின் காணிகளைக் கையகப்படுத்தும் நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்படவிருந்த நிலையில், பொதுமக்கள் 11

பருத்தித்துறைக் கடற்பரப்பில்

## 14 தமிழக மீனவர்கள் கடற்படையால் கைது

யாழ்ப்பாணம், நவ.17
இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் தமிழக மீனவர்கள் 14 பேர் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் படகு ஒன்றும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. பருத்தித்துறைக் 11

## ஜனாதிபதி ரணிலும் மஹிந்தவும் ஒரு குட்டையில் ஊறிய மட்டைகளே!

அனைவரையும் சிறையில் தள்ளுவோம்
சூளுரைக்கிறார் அநுரகுமார



கொழும்பு, நவ.17
ஊழல்வாதிகள் ஒருபோதும் இன்னோர் ஊழல்வாதிக்குத் தண்டனை வழங்கமாட்டார்கள். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு இந்நாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தண்டனை வழங்கமாட்டார். அதேபோல்ரணிலுக்கு மஹிந்த தண்டனை 11

## "பட்ஜெட்" பயத்தைக் காட்டி பதவிபெற பெரமுன திட்டம்

அசைந்து கொடுக்க ரணில் மறுப்பு
குழப்பத்தில் கொழும்பு அரசியல்

கொழும்பு, நவ.17
வரவு - செலவுத் திட்ட வாக்களிப்புக்கு முன்னர் அமைச்சுப் பதவிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரம 11

## கந்தன்குளம் காட்டிலிருந்து குடும்பஸ்தரின் உடல் மீட்பு

வவுனியா, நவ.17
வவுனியா, கந்தன்குளம் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். 10

## வெளிநாடுகளின் உதவிக்காகவே தமிழர் மீது அரசுக்கு திடீர்ப் பாசம்!

த.தே. கட்சித் தலைவர் ஸ்ரீகாந்தா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.17
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், அவரது அரசாங்கமும் வெளிநாடுகளின் கருணையால் ஆட்சியில் நீடிக்கும் நிலையில், அவர்களுக்குத் தமிழர்களுடனான பேச்சு ஒன்று அவசியமாகவும், அவசரமாகவும் தேவைப்படுகின்றது. ஆனால், 10

## சாந்தன், முருகன் உட்பட நால்வரை இலங்கைக்கு அனுப்புவதற்கு ஏற்பாடு

உத்தரவு பிறப்பித்தது
இந்திய மத்திய உள்துறை அமைச்சகம்

புதுடில்லி, நவ.17
இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலையில் தொடர்புபட்டவர்கள் என்ற குற்றச்சாட்டில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு, அந்தநாட்டு உயர் நீதிமன்றத்தால் அண்மையில் விடுவிக்கப்பட்ட நான்கு இலங்கைப் பிரஜைகளும், அவர்களது சொந்த நாட்டுக்கு நாடு கடத்தப்படு 11

## வாகனங்களை வாடகைக்கு எடுத்து "அடகு" வைக்கும் பலே பேர்வழிகள்

இதுவரை பல முறைப்பாடுகள் பதிவு

யாழ்ப்பாணம், நவ.17
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வாகனங்களை வாடகைக்கு எடுத்துச் சென்று அவற்றை அடகு வைக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று தெரியவருகின்றது.
வாகனங்களை வாடகைக்கு விடும் நிறுவனங்களிடம் இருந்து சில நாள்களுக்கு வாகனங்களை வாடகைக்கு எடுப்போர், அந்த வாகனங்களை 10

Digitized by Noolaham Foundation

# ரணிலின் தீர்வுக்கான அழைப்பு வெறும் கண்துடைப்பு நாடகமே

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிப்பு

**கொழும்பு, நவ. 17**



**இலங்கையில் சமஷ்டியாட்சி முறையை ஏற்படுத்துவது நடைமுறைக்கு சாத்தியமில்லை என 2021ஆம் ஆண்டில் தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க, தற்போது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் எனக் கூறி தமிழ்த் தரப்பினரை பேச்சுக்கு அழைப்பது ஒரு நாடகமாகும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சாடியுள்ளார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றை எட்டுவதற்காக வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளை ஒரே மேசையில் அமர்ந்து, பேச்சில் ஈடுபட வருமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த புதன்கிழமையன்று நாடாளுமன்றில் வைத்து அழைப்பொன்றை விடுத்திருந்தார். ஐ.தே.க. சார்பில் தேசியப் பட்டியல் ஊடாகக் கிடைத்த ஒரேயொரு ஆசனத்தை பெற்று நாடாளுமன்றம் வந்திருந்தபோது, இலங்கையில் சமஷ்டியாட்சியை ஏற்படுத்துவது நடைமுறைக்கு சாத்திமில்லை என அப்போது ரணில் விக்கிரமசிங்க என்னிடம் தெரிவித்திருந்தார்.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்கு, சர்வதேசத்திடமிருந்து நிதி உதவிகளை பெற்றுக்கொள்வதற்காகவே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஆதரவு வழங்குகிறது.

கடந்த 2015 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது, நாட்டில் சமஷ்டியை ஏற்படுத்துவதற்காக, நல்லாட்சி அரசாங்கத்திடம் பேரம் பேசக்கூடிய மக்கள் ஆணையை எமக்குப் பெற்றுத் தாருங்கள் என வடக்கு, கிழக்கு தமிழ் மக்களிடம் கேட்டுக்கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அந்த ஆணைக்கு மாறாக ஒற்றையாட்சிக்கு இணங்கியிருந்தனர். இன்றும், எந்தவித பேரமும் பேசாமல் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளவுள்ளமை அன்று போலவே இன்றும் தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற செயலாகும். இலங்கைத் தீவில் அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய இன நல்லிணக்கத்துக்கான தீர்வு பெற்றுக் கொடுக்கப்படுவதற்கு சமஷ்டியே ஒரே வழியாகும் - என்றார். (ம)

# 23 பில். ரூபா நிலுவையாலே மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

## *சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டு*

கொழும்பு, நவ. 17

மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான 23 பில்லியன் ரூபா நிலுவையை விநியோகஸ்தர்களுக்குச் செலுத்த வேண்டியுள்ளது. இதுவே நாட்டில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதற்குப் பிரதான காரணமாகும் என்று சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

மருந்துக் கொள்வனவின் நிலுவை செலுத்தாததன் காரணமாக புதிய முன்பதிவுகளை விநியோகஸ்தர்கள் ஏற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நிலுவையை செலுத்துவதற்கான நிதியை உடனடியாகப் பெற்றுக்கொடுக்குமாறு நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே இந்தியக் கடன் திட்டத்தினூடாக மேலும் 53 வகையான மருந்துகள் கடந்த வாரம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன - என்று அந்த அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ஒ-14,இ)

# கஞ்சா சட்டபூர்வமானால் தேசம் தூள்தூளாகும்!

## சோபிததேரர் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 17



கஞ்சா செய்கையை சட்டபூர்வமாக்கும் எந்தவொரு முயற்சி யும் வீழ்ச்சியின் தொடக்கமாகும். இது ஏற்கனவே முடங்கிப்போயிருக்கும் தேசத்தை முற்றிலும் தூள்தூளாக்கும் என ஓமல்பே சோபிததேரர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைக் குடியுரிமையைக்கூட வைத்திருக்காமல் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார் எனக் குற்றம் சாட்டப்பட்ட பெண் ஒருவர், நாடாளுமன்ற உறுப்பினராக வேடமணிந்து இது குறித்து முதலில் பகிரங்கக் கருத்து வெளியிட்டார். 'அந்தப் பெண்ணுக்கு இந்த நாட்டின் மீது எந்தப் பொறுப்பும் இல்லை. அவர் வேறு நாட்டில் உள்ள ஏஜென்சியில் வேலை செய்பவர். அந்த ஏஜென்சியால் தனக்குக் கொடுக்கப்படும் அனைத்துப் பணிகளையும் கையாளுகிறார். உளவாளியாகச் செயற்படுகிறார். வெளிநாட்டு அரசாங்கங்கள் அவர் என்ன செய்யவேண்டும் என்று விரும்புகின்றன. இத்தகைய செயற்பாடுகளுக்கு ஜனாதிபதி அனுமதி வழங்கிய செயற்பாட்டில் ஒரு தலைமறைவு தந்திரம் இருப்பதை தெளிவாகக் காட்டுகிறது. கஞ்சா பயிரிடுவதை சட்டபூர்வமாக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்குவது ஒட்டுமொத்த தேசத்துக்கும் துரோகம் செய்யும் பாவமாகக் கருதலாம்.

ஆயுள்வேத மருந்துகள் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் அனைத்துப் பொருள்களும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. தற்போது டொலர் நெருக்கடியால் இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளது. ஆயுள்வேத மருந்து தயாரிப்புகளுக் கான மூலப்பொருள் பற்றாக்குறை உள்ளது. இந்தப் பொருள்களைப் பயிரிடும் திறன் எங்களிடம் இருந்தாலும், அரசாங்கம் சட்டவிரோத மூலப்பொருளை ஊக்குவிக்க முயற்சிக்கிறது - என்றார். (ம)



# கோடாவுடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 17

நிலத்தின் கீழ் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 150 லீற்றர் கோடாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சங்கானைப் பகுதியிலுள்ள வீட்டில் நீண்ட காலமாக கசிப்பு காய்ச்சும் செயற்பாடு இடம்பெற்று வருகின்றதுஎன்றுமானிப்பாய்பொலிஸ் நிலையத்தில் பல முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன.

இந்த நிலையில் யாழ்.மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் சங்கானைப் பகுதியிலுள்ள சந்தேகத்துக்கிடமான வீட்டில் சோதனை முன்னெடுக்கப்பட்டது.

அதன்போது வீட்டின் பின்புறமாக நிலத்தின் கீழ் புதைத்து வைக்கப்பட்டிருந்த 150 லீற்றர் கோடா கைப்பற்றப்பட்டது. அதனையடுத்து 35 வயதுடைய சந்தேகநபர் யாழ்.மாவட்ட பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டவர் மேலதிக விசாரணைகளுக்காக மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார் என்று யாழ். மாவட்ட பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-14,26)

# கோத்தாவின் தவறான முடிவே தேயிலை உற்பத்தியில் வீழ்ச்சி

## *ஒப்புக்கொண்டார் பெருந்தோட்டத்துறை அமைச்சர்*

கொழும்பு, நவ. 17

கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் இரசாயன உரத்துக்கு தடை விதித்த தவறான முடிவாலேயே தேசிய உற்பத்தித் துறை பாதிக்கப்பட்டுள்ளது என பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கோத்தாபய ஆட்சிகாலத்தில் இரசாயன உரத்துக்கு தடை விதிக்கப்பட்டால் அது தேயிலை உற்பத்தித் துறையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

ஆயினும் எதிர்க்கட்சித் தலைவர் கூறுகின்றமை போல் தேயிலை உற்பத்தி 60 வீதத்தால் வீழ்ச்சியடையவில்லை. 10 முதல் 15 வீதம்வரையே வீழ்ச்சியடைந்துள்ளது.

தற்போது தேயிலை உற்பத்தியை மேம்படுத்துவதற்குத் தேவையான அனைத்துவித நடவடிக்கைகளையும் நாம் மேற்கொண்டுள்ளோம். உரம் கிடைக்கின்றது. சிறந்தகால நிலை உள்ளது. எனவே, தேயிலை உற்பத்தியை வீழ்ச்சியிலிருந்து மீட்டெடுக்கலாம்.

அதேவேளை இலங்கையுடன் தேயிலை ஏற்றுமதி வர்த்தகத்தில் பங்களாராக விளங்கும் ரஷ்யா, உக்ரைன், சிரியா, ஈரான், ஈராக் மற்றும் லிபியா போன்ற நாடுகளில் போர்ச்சூழல் நிலவுகின்றது. அந்த வகையில் அமெரிக்கா, லத்தீன் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய சந்தைகளை நோக்கி நாம் நகர வேண்டியுள்ளது - என்றார். (ச-44)

# 634 பொருள்களின் விலைகள் எகிறின!

## *வர்த்தமானி வெளியீடு*

கொழும்பு, நவ. 17

இறக்குமதி செய்யப்படும் 634 அத்தியாவசிய பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என அரசாங்கம் அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டு அரசாங்கம் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத்திட்ட யோசனைகளுக்கமைய இந்த விலை அதிகரிப்பு இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி இறக்குமதி செய்யப்படும் 634 பொருள்களின் விலைகள் இன்று முதல் நடைமுறைக்கு வரும்வகையில் அதிகரிக்கப்படவுள்ளன. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 61 வர்த்தகர்களிடம் ரூ. 14 லட்சம் தண்டம்!

## பாவனையாளர் அதிகாரசபை கடந்த மாதம் அதிரடி

யாழ்ப்பாணம், நவ. 17
யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த ஒக்ரோபர் மாதத்தில் மாத்திரம் 61 வர்த்தகர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை பிரயோகிக்கப்பட்டு 14 லட்சத்து 51 ஆயிரம் ரூபா அறவிடப்பட்டுள்ளது என யாழ்.மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த ஒக்ரோபர் மாதத்தில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் திடீர் சுற்றிவளைப்புகளின்போது 61 வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

பொருள்களுக்கான சந்தை விலையை காட்சிப்படுத்தாமை, குறிக்கப்பட்ட விலை மற்றும் கட்டுப்பாட்டு விலையை மீறிபொருள்களை விற்றமை, ஏமாற்றும் நோக்கோடு பண்டத்தின் மீது பொறிக்கப்பட்ட விலையை மாற்றி விற்பனை செய்தமை, நிறை குறைவாக பாண் விற்பனை செய்தமை, உற்பத்தி செய்தமை போன்ற குற்றச்சாட்டுகளுக்கமைய அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே யாழ். வர்த்தகர்கள், பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு அவதானமாக தமது வியாபாரச் செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டு மென யாழ். மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் பொறுப்பதிகாரி விஜிதரன் அறிவுறுத்தியுள்ளார். (ச-26)

## கண்டாவளை

# சுகாதார மருத்துவ அதிகாரியை இடமாற்றக் கோரி ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி, நவ. 17
**கிளிநொச்சி பிராந்திய சுகாதார பணிமனையின் ஆளுகைக்குட்பட்ட கண்டாவளை உதவி சுகாதார மருத்துவ அதிகாரியை இடமாற்றம் செய்யுமாறு கோரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை முன்பாக நேற்று ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.**

இதன்போது கர்ப்பிணித் தாய்மார்கள், பொதுமக்கள் ஒன்றுதிரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"சீரழிக்காதே சீரழிக்காதே எமது சமூகத்தைச் சீரழிக்காதே" "மது போதை பாவித்து விட்டு மருத்துவம் பார்க்காதே", "மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளர்களை சீரழிக்காதே", "வெளியேறு வெளியேறு விடுதியை விட்டு வெளியேறு" போன்ற பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



அதனையடுத்து புதிதாக நியமிக்கப்பட்ட கண்டாவளை சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் நிமால் அங்கு வருகைதந்து இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார். (ச-113)



# போதைப்பொருளுக்கு எதிராக சைக்கிளில் விழிப்புணர்வு

கிளிநொச்சி, நவ. 17
உயிர்கொல்லி போதைப்பொருளுக்கு எதிராக சைக்கிள் பயணத்திலான விழிப்புணர்வு ஒன்று கிளிநொச்சியில் நேற்றுப் புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

"இளையோரின் எதிர்காலம் இன்றே" அமைப்பின் ஏற்பாட்டில், கிளிநொச்சி மருத்துவமனை முன்பாக ஆரம்பமான சைக்கிள் பயணம் ஏ-9 வீதி ஊடாகப் பயணித்து இரத்தினபுரம், கணேசபுரம் பகுதி ஊடாக கிளிநொச்சி மாவட்டச் செயலகம் வரை சென்று நிறைவுற்றது.

கிளிநொச்சி நகர வட்டாரத்தை முன்னுரிமைப்படுத்தி, போதைப்பொருள் பயன்பாட்டிலிருந்து இளம் சமூகம் விடுதலை பெறும் வகையில் சமூக செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள், யுவதிகள் உள்ளிட்ட பலரின் பங்களிப்புடன் விழிப்புணர்வு முன்னெடுக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து போதைக்கு எதிரான விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரங்களும் மாணவர்கள், பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன.

விழிப்புணர்வு நிறைவில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச்செயலர் க.சிறிமோகனிடம் விழிப்புணர்வுக்கு எதிரான மனுவொன்றும் ஏற்பாட்டாளர்களால் கையளிக்கப்பட்டது. (ஓ-14,113)

## மஹோற்சவம்

கோண்டாவில் ஈழத்துச்சபரிமலை சபரீச ஐயப்பன் தேவஸ்தானத்தின் மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை காலை கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து சாமிமார்களுக்கு புனித விரதமாலை அணிவிக்கப்படும் அன்று தொடக்கம் மண்டல விரத பூசைகள் எல்லாம் உள்ளடக்கி 60 நாள்கள் நடைபெறவுள்ளன.

தேவஸ்தானக் குருமுதல்வர் சிவஸ்ரீ.கி.ஹரிஹரசுத சிவாச்சாரியார் தலைமையில் இடம்பெறவுள்ள உற்சவத்தில் இறுதியாக எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14 ஆம் திகதி மகரஜோதிப் பெருவிழா இடம்பெறும் என்று தேவஸ்தானத்தினர் அறிவித்துள்ளனர். (ஓ-14)

# உடைமையில் கஞ்சா வவு.வில் மூவர் கைது

வவுனியா, நவ. 17
வவுனியா, பாவற்குளம் பகுதியில் உயிர்கொல்லி போதைப்பொருள்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 3 இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, உளுக்குளம் பொலிஸார் நேற்றுமுந்தினம் செவ்வாய்க்கிழமை மேற்கொண்ட விசேட கண்காணிப்பு நடவடிக்கையின்போதே இந்தக் கைது இடம்பெற்றது.

பாவற்குளம் பன்சாலை வீதி ஊடாகச் சென்ற குறித்த மூவரை சந்தேகத்தின் அடிப்படையில் சோதனையிட்டபோது அவர்களிடமிருந்து 50 கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது.

வவுனியா கூடுவெந்தபுலவு மற்றும் பாவற்குளம் பகுதிகளைச் சேர்ந்த 18-25 வயதுக்குட்பட்ட மூவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களை மேலதிக விசாரணையின் பின் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-18)

# சிறுமியை வன்புணர்ந்த சிறியதந்தைக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை

வவுனியா, நவ. 17
15 வயதுச் சிறுமியை வன்புணர்ந்த சிறுமியின் சிறியதந்தைக்கு 10 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனையும் 4 லட்சம் ரூபா நட்ட ஈடு செலுத்த வேண்டும் என்றும் வவுனியா மேல் நீதிமன்றில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வவுனியா, கிழவன்குழம் பகுதியில் வசித்து வந்த சிறுமியின் தாயார் கடந்த 2014 ஆம் ஆண்டு மே மாதம் வெளிநாடு சென்றுள்ளார். வெளிநாடு செல்ல முன் சிறுமியை தனது தாயின் தங்கையின் வீட்டில் ஒப்படைத்து விட்டுச்சென்றுள்ளார். சிறுமி, சித்தி வீட்டில் வசித்து வந்தவேளை, சித்தியின் கணவரால் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார்.

அதன்பின்னர் சிறுமிக்கு ஆண் குழந்தை பிறந்தது. அதனையடுத்து குழந்தையின் தந்தையை டி.என்.ஏ. பரிசோதனை செய்தபோது குழந்தைக்கு, சிறுமியின் சித்தியின் கணவரே என உறுதிப்படுத்தப்பட்டது.

இந்த வழக்கு வவுனியா நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, சிறுமியின் சிறியதந்தைக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனையும் 4 லட்சம் ரூபா நட்ட ஈடு செலுத்தவேண்டும் என்று மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் உத்தரவு பிறப்பித்தார்.

அத்துடன் விதிக்கப்பட்ட 4 லட்சம் ரூபா நட்டஈட்டுத்தொகையைக் கட்டத் தவறும் பட்சத்தில், மேலும் இரு ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனையும் 20 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் செலுத்த வேண்டும் எனவும் அதனையும் கட்டத் தவறும் பட்சத்தில் மேலும் இரு ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையும் விதித்து இளஞ்செழியன் தீர்ப்பளித்துள்ளார். இதனிடையயே தண்டனையைக் குறைக்குமாறு தெரிவித்து குற்றவாளியான சிறுமியின் சிறியதந்தை கோரிய விண்ணப்பம் நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டுள்ளது. (ஓ-14,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயத்துக்கு எரிபொருள் கண்காணிக்க அதிகாரிகள்

கொழும்பு, நவ. 17

**விவசாயத்துக்கான எரிபொருள் விநியோகத்துக்கு மேலதிக செயலாளர் ஒருவரின் தலைமையில் அதிகாரிகள் இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.**

விவசாயத்துக்கான எரிபொருளை விநியோகிக்கும் செயற்பாடுகளுக்கான இணைப்பு நடவடிக்கைகள் மற்றும் கண்காணிப்புகளுக்காக அவர்கள் நியமிக்கப்பட்டனர்.

இந்தச் செயற்பாடுகளின் மேற்பார்வைக்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரியொருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒரு பிரதேசத்தில் அறுவடையின் போது அல்லது அறுவடையின் பின்னர் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்கு சிக்கல்கள் ஏற்படும் பட்சத்தில் மாவட்ட செயலர்களை சந்தித்து அதற்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என விவசாய அமைச்சு மேலும் குறிப்பிட்டது. (ச-இ)

## விருதுகளுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், நவ. 17

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலக கலாசாரப் பேரவையால் 2022ஆம் ஆண்டுக்கான கலைப்பருதி மற்றும் இளங்கலைஞர் விருதுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விருதுக்கு விணப்பிக்கும் கலைஞர்கள் விண்ணப்பப் படிவத்தை பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார கிளையில்பெற்று நாளை 18ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பாக பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கவும் எனப் பருத்தித்துறை பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (ச)



## அபிவிருத்தி லொத்தர் மூலம் உருவான சுப்பர் வெற்றியாளர்

நாளுக்கு நாள் உங்களை அதிர்ஷ்டத்தை நோக்கி கொண்டு செல்லும் அபிவிருத்தி லொத்தர் சபை மூலம் இந்த முறையும் அதிர்ஷ்டசாலிகளிடையே 10 லட்சம் ரூபா வீதம் பணப்பரிசுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

அவர்களுக்குரிய காசோலைகள் வழங்கும் நிகழ்வு அபிவிருத்தி லொத்தர் சபையின் உதவி பொது முகாமையாளர் (விற்பனை) சுனில் ஜயரத்ன மற்றும் உதவி பொது முகாமையாளர் (நிதி) கசுன் ஜயசூரிய ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

கப்ருக 1042ஆவது சீட்டிழுப்பு வாரத்தின் வெற்றியாளர், கப்ருக 1044ஆவது சீட்டிழுப்பு வாரத்தின் வெற்றியாளர், கப்ருக 1048ஆவது சீட்டிழுப்பு வாரத்தின் மற்றும் சுப்பர் போல் 1867 ஆவது சீட்டிழுப்பு வாரத்தின் வெற்றியாளர்களுக்குத் தலா 10 லட்சம் ரூபா பணப்பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த லொத்தர்களை விற்பன்ன செய்த விற்பனை முகவர்களும் இந்த நிகழ்வுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். (எ)

## தேசிய வாசிப்பு மாத விழிப்புணர்வுப் பேரணி

யாழ்ப்பாணம், நவ. 17



தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வலி.மேற்கு பிரதேசசபை மற்றும் சங்கானை சிவப்பிரகாச பாடசாலைச் சமூகம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த விழிப்புணர்வுப் பேரணி கடந்த வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் இருந்து ஆரம்பமான பேரணி, சங்கானை நகரப் பகுதி வரை இடம்பெற்றது. நிகழ்வின் ஒரு பகுதியாக போதைப் பொருளுக்கு எதிரான பரப்புரையும் முன்னெடுக்கப்பட்டது. விழிப்புணர்வுப் பேரணியில் வலி.மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரன், பிரதேசசபை உறுப்பினர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-14-27)

## போதைதடுப்பு விழிப்புணர்வு கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 17

போதைப்பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வுக் கூட்டம் சித்தங்கேணி ஜனசக்தி சனசமூக நிலையத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது போதைப்பொருள் பாவனையை எவ்வாறு தடுப்பது மற்றும் அதிலிருந்து விடுபடும் வழிமுறைகள் ஆகியவை தொடர்பில் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் வலி. மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபாகுகதாஸ், சங்கானை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், வட்டுக்கோட்டை பொலிஸார், ஜனசக்தி சனசமூக நிலையத்தினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-27)

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் மீது வாள்வெட்டு

## 3 வயதுக் குழந்தை பலி

கொழும்பு, நவ. 17

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் மீது அயலவரால் நடத்தப்பட்ட வாள்வெட்டுத் தாக்குதலில் மூன்றரை வயதுக் குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவம் மாத்தளை - ரபிமகம பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வாள்வெட்டுத் தாக்குதலுக்கு இலக்கான நால்வரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டநிலையில் மூன்றரை வயது ஆண் குழந்தை உயிரிழந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

38 வயதான தாய், 19 வயதான மகள் மற்றும் 15 வயதான மகன் ஆகியோர் மாத்தளை மருத்துவமனையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இரு குடும்பங்களுக்கு இடையில் நீண்டகாலமாக இருந்துவந்த தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது என ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட வாளுடன் அயலவரான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ச-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. சகோதர வகையில் சிறு சிறு சங்கடங்கள், வீண் செலவுகளும் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழி உ றவினர்கள் மூலம் ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. சிறு சிறு சங்கடங்கள், வீண் செலவுகளும் ஏற்படக்கூடும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகள் நிறைவேறும். எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைகக்கூடும். உணவு விஷயத்தில் கவனம் தேவை.

**சிம்மம்:** எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாக முடியும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பண வரவுக்கும் பொருள்சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. பிள்ளைகளால் மகிழ்ச்சி ஏற்படும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள். வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். பிற்பகலுக்கு மேல் உறவினர்கள் வழியில் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படும். கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.

**தனுசு:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படும். புதிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டாம். உறவுகளால் செலவுகள் ஏற்படும். குடும்பத்தில் குழப்பம் ஏற்பட வாய்ப்புண்டு.

**மகரம்:** மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். தந்தை வழி உறவினர்களால் காரிய அனுகூலம் ஏற்படும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. மனவருத்தங்கள் நீங்கும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். எதிர்பார்த்த காரியம் இழுபறியானாலும் முடிந்துவிடும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**மீனம்:** பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். ஆனால், தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். உறவினர்கள் வகையில் வீண்மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வடமாகாண மரநடுகை மாதம்

நவம்பர் 2022

"பொருள்களின் உண்மையான இயல்புகளை நாம் சரியாகக் கருத்திற் கொண்டால் ஒவ்வொரு மரமும் தங்கத்தினாலோ வெள்ளியினாலோ ஆக்கப்பட்டிருப்பதை விட அது பச்சையாக இருப்பதே அதி உன்னத மானது" – மார்ட்டின் லூதர் (ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)

## இலங்கை இன்னொரு உருகுவே?

ஏற்றுமதிக்காக கஞ்சாவைப் பயிரிடுவது தொடர்பில் ஆராய்வதற்காக தனியான குழுவை அமைப்பதற்கு முன்மொழிந்திருக்கின்றார் ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க. நாட்டின் கடன்களை அடைப்பதற்காகவும் ஏற்றுமதி மூலம் கிடைக்கும் வருவாயையும் டொலரையும் அதிகரிப்பதற்காகவும் கஞ்சாவை இலங்கையில் பயிரிட வேண்டும் என்ற கோரிக்கை கடந்த சில மாதங்களாகவே வலுப்பெற்றிருந்தது. நாடாளுமன்ற உறுப்பினர்களான டயானே கமகே, சிசிர ஜயக்கொடி உள்ளிட்டோர் நாடாளுமன்றிலும் வெளியிலும் இந்தக் கருத்தைத் தொடர்ச்சியாக வலியுறுத்திவரும் நிலையில், அந்தக் கோரிக்கைகள் மற்றும் வலியுறுத்தல்கள் செயலுருப்பெறும்காலம் வெகு தொலைவில் இல்லை என்பதை கட்டியம் செய்திருக்கின்றது 2023ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டம்.

இதேவேளை– நாட்டின் வருமானத்தைப் பலப்படுத்துவதற்கு மக்கள் மீது, குருவியின் தலையில் வைக்கப்பட்ட பனங்காயாக வரிகளை எகிறச் செய்வதையும், மேற்குறிப்பிட்ட சர்வதேச முரண் வர்த்தகங்களையும் மேற்கொள்வதைத் தவிர வேறு வழிகளற்ற – கையாலாகாத் தனத்துடன்தான் ரணில் அரசாங்கம் பயணப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதையும் ரணிலின் பட்ஜெட் உரை பட்டவர்த்தனம் செய்திருக்கின்றது. ஆனால், இதன் பின்னரான ஆபத்துக்கள் உண்மையில் மிகப்பெரியன. அந்த ஆபத்துக்கள் இந்த நாட்டை மீண்டெழ முடியாத வகையில் நின்றுகொல்லும்.

உலகில் கஞ்சாவை சட்டபூர்வமாகப் பயிரிட்ட முதல் நாடாக தென் அமெரிக்கக் கண்டத்தின் உருகுவே உள்ளது. உலகின் முதலாவது கால்பந்தாட்டக் கிண்ணத்தைக் கைப்பற்றிய நாடு உருகுவே. முன்னொரு காலத்தில் கால்பந்தாட்டம் என்றாலே உருகுவேதான். ஆனால், இன்று இந்தநிலை மாறி 'கஞ்சா என்றாலே உருகுவேதான்' என்றாகியிருக்கின்றது. இதற்கெல்லாம் காரணம் கஞ்சா பயிர்ச்செய்கை. இத்தனைக்கும் வெளிநாட்டு ஏற்றுமதி மற்றும் மருத்துவத் தேவைகள் கருதியே கஞ்சாவைப் பயிரிட ஆரம்பித்தது உருகுவே. ஆனால், ஏற்றுமதிக்காகவும் மருத்துவத்துக்காகவும்தான் அங்கு கஞ்சா பயன்பட்டதா ? என்றால், 'இல்லை' என்பதுதான் இரண்டாம் கருத்தின்றிய ஒற்றைப்பதில். இதன் விளைவாகக் கடந்த 30 ஆண்டுகளில் 300 மடங்கு கஞ்சாப் பாவனை உருகுவேயில் அதிகரித்து அந்த நாட்டின் இளைஞர் சமூகத்தை ஒட்டுமொத்தமாக விழுங்கியிருக்கின்றது.

உருகுவேயின் தற்போதைய நிலைவரத்தின்படி, 18 வயதைப் பூர்த்தி செய்தவர்கள் அரச மருந்தகங்களில் மாதத்துக்கு 40 கிராம் கஞ்சாவை வாங்கிக்கொள்ளலாம். ஒவ்வொரு குடிமகனும் தனது வீட்டில் 6 கஞ்சாச் செடிகளை வளர்க்கலாம். 15 முதல் 45 பேர் இணைந்து தனிச்சங்கம் தொடங்கி ஆண்டுக்கு 99 கஞ்சாச் செடிகள்வரை வளர்க்கலாம். இதன் தாக்கம் உருகுவேயில் மட்டுமல்லாமல் ஒட்டுமொத்தத் தென் அமெரிக்கக் கண்டத்துக்கும் வியாபித்து இன்று போதைப் பொருள்களின் சொர்க்கபுரியாக தென் அமெரிக்கக் கண்டம் மாறியிருக்கின்றது. கஞ்சாவால் கிடைத்த வருவாயை விடவும் அதனால் உருகுவே இழந்ததுதான் அதிகம்.

கஞ்சாவைப் பயிரிடுவதற்கு இங்கிருக்கும் எதிர்ப்பலையை நாடிபிடித்துப் பார்ப்பதற்காக கஞ்சாவைப் பயிரிடுவது தொடர்பில் ஆராய்வதற்காக தனிக்குழு தொடர்பான முன்மொழிவை ரணில் சமர்ப்பித்திருக்கலாம். ஒருவேளை எதிர்காலத்தில் கஞ்சாவைப் பயிரிடுவது செயலுருப் பெறுமானால் அன்று இலங்கை சவக்கிடங்கை நோக்கிய தன் பயணத்தை விரைவு கதியில் ஆரம்பிக்கும். 'கஞ்சா என்னும் சட்டவிரோத போதைப்பொருளைக் கட்டுப்படுத்துங்கள்' என்று மக்கள் அவலக்குரல் எழுப்பிக் கொண்டிருக்கையில் அதற்குச் சட்ட அங்கீகாரத்தைத் தேடமுயல்வதற்கும் ஒரு துணிவு வேண்டும்தான். சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு சட்ட அங்கீகாரங்களைக் கொடுத்துவிட்டால் அனைத்தும் முடிந்துவிட்டது என்பதுதான் ஆசிய ஆச்சரியத்தின் சிந்தனை மட்டமோ என்னமோ!




# நாட்டின் வங்குரோத்து நிலைக்கு 225 எம்.பிக்களுக்குமே பொறுப்பு!

## அமைச்சர் விஜயதாஸ தெரிவிப்பு

**கொழும்பு, நவ. 17**

**நாட்டின் வங்குரோத்து நிலைமைக்கு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பொறுப்பானவர்கள் என்று மக்கள் விமர்சிப்பதில் நியாயம் இருக்கின்றது என்று தெரிவித்தார் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நிவாரணம் வழங்குவதை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படவில்லை என்பதை கட்சி பேதமின்றி ஏற்றுக்கொள்கிறோம். நாடு தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடியான நிலையில் இருந்து மீள்வதற்கான ஒரு ஆரம்பமாகவே வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அரசியல் மற்றும் பொருளாதார உறுதித்தன்மை பலப்படுத்தப்பட வேண்டும். ஒரு தனிநபர் தன்னிச்சையாக எடுத்த தீர்மானங்கள்தான் நாட்டில் தீவிர பொருளாதாரப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. ஆகவே தனிநபரின் அதிகாரத்தை மட்டுப்படுத்தி, நாடாளுமன்றத்தின் கூட்டுப்பொறுப்பை ஏற்படுத்தும் சூழல் அரசியலமைப்பு திருத்தம் ஊடாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

அரசியல் பரிந்துரைகளுடன் தவறான நபர்கள் அரச உயர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டதால் நாடு இன்று மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டது. 2006 ஆம் ஆண்டு மத்திய வங்கியின் ஆளுநராக அஜித் நிவாட் கப்ராலை நியமிக்கும் போது கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்தேன். தற்போதைய பொருளாதாரப் பாதிப்புக்கு மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் பி.பி.ஜயசுந்தர ஆகியோர் பொறுப்புக் கூறவேண்டும்.

அரச வருமானத்தில் வரி வருமானம் பெரும் பங்கு கொண்டுள்ளது. இலங்கை சுங்கத் திணைக்களத்தின் ஊடாக அரச வருமானத்துக்கு 50 அல்லது 60 சதவீத வருமானம் கூடக் கிடைக்கப்பெறுவதில்லை. நாட்டில் பொதுவான மற்றும் நிலையான வரிக் கொள்கை கிடையாது. வகுக்கப்படும் வரிக் கொள்கையை 15 அல்லது 20 வருட காலங்களுக்காவது கடைப்பிடிக்கவேண்டும்.

ஊழல் மோசடி தற்போதைய பொருளாதார பாதிப்பு பிறிதொரு காரணியாகும். அரசாங்கத்தின் அனைத்து விடயங்களிலும் மோசடி காணப்படுகிறது. கறுப்புச் சந்தை வர்த்தகர்கள் அரசாங்கத்தை நிர்வகிக்கும்போது முறைகேடான சம்பவங்களே இடம்பெறும். முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவை கறுப்புச் சந்தை வர்த்தகர்கள் ஆக்கிரமித்திருந்தார்கள் - என்றார். (ம)

## விவசாய உற்பத்திகளில் 5,400 கோடி ரூபா இழப்பு

நாட்டில் வருடாந்தம் வனவிலங்குகளால் விவசாய உற்பத்திகளுக்கு சுமார் 5 ஆயிரத்து 400 கோடி ரூபா இழப்பு ஏற்படுகின்றது என விவசாய அமைப்பால் அறிக்கையிடப்பட்டுள்ளது.

ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆய்வு மற்றும் பயிற்சி நிலையத்தால் வெளியிடப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்படுகிறது.

பெருமளவு பாதிப்பை யானை, குரங்கு, மயில், ஆமை, மர அணில் மற்றும் காட்டுப் பன்றி என்பன அதிகளவில் ஏற்படுத்துகின்றன என விவசாய அமைச்சர் தெரிவித்தார். (ச-44)

நாளை 18.11.2022 வெள்ளிக்கிழமை கார்த்திகை 02

சுபநேரம் : 06.08 - 07.38
ராகுகாலம்: 10.38 - 12.08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நவாலி அரசடி வீதியைச் சேர்ந்த அமரர் பொன்னையா கந்தசாமியின் இரண்டாவது ஆண்டு நினைவாக சூழலியல் மேம் பாட்டு அமைவனத்தின் (சூழகம்) செயலாளர் கருணாகரன் நாவலனின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம், மானிப்பாய், நவாலி மகாவித்தியாலயத்திலும், அதன் முன்பாக அமைந்துள்ள அரசடி வீதியிலும் 30 மரக்கன்றுகள் கடந்த திங்கட்கிழமை நடுகைசெய்யப்பட்டன. (ய)

# சந்தையில் மீண்டும் முட்டைக்குத் தட்டுப்பாடு

கொழும்பு, நவ. 17

சந்தையில் மீண்டும் முட்டைக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக தாம் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று உணவகங்கள் மற்றும் பேக்கரி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

முட்டையின் தட்டுப்பாடு காரணமாக எதிர்வரும் பண்டிகைக்காலங்களில் தேவைக்கேற்ப கேக் உள்ளிட்ட பேக்கரிப் பொருள்களை உற்பத்தி செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்த்தன தெரிவித்தார்.

இதுதொடர்பில் அகில இலங்கை கோழி இறைச்சி வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகரவிடம் வினவியபோது அவர் தெரிவித்ததாவது:

50 ரூபாவுக்கு அதிகமாக முட்டை விற்பனை செய்பவர்களை க் கைது செய்ய நுகர்வோர் விவகார அதிகார சபை நடவடிக்கை எடுத்ததை யடுத்து, வியாபாரிகள் முட்டை விற்பனையை நிறுத்தியுள்ளனர்.

இதனாலேயே திறந்த சந்தைகளில் தற்போது முட்டைக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது- என்றார்.

(ஒ-14,இ)


## Invitation for Bids (IFB)

### Office of the Regional Director of Health Services, KILINOCHCHI

1. The Chairman Regional Procurement Committee (RPC), on behalf of Office of the Regional Director of Health Services Kilinochchi invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the tablebelow.
2. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.
3. Interested bidders may obtain further information from the Office of the Regional Director of Health Services, Kilinochchi and inspect the bidding documents at the address Office of the Regional Director of Health Services, Kandy Road, Kilinochchi. From 8.30 am to 3.00 pm.
4. A complete set of Bidding Documents in the English language may be purchased by interested bidders on the submission of a written application to the Regional Director of Health Services, Office of the Regional Director of Health Services,Kandy Road, Kilinochchi, Telephone 021 228 5932/021 222 5719 Fax 021 2285931from **17.11.2022 until 30.11.2022 from 09.00 hrs to 15.00 hrs.** Upon payment of a non-refundable fee of two thousand Rupees. **(Rs.2,000.00).** The method of payment will be cash.
5. Bids shall be delivered in duplicate to the address at **Chairman,Regional Procurement Committee,Office of the Regional Director of Health Services,Kandy Road, Kilinochchi** on or before**10.00 am on 01st December 2022.** Late bids will be rejected. Bids will be opened at the above place soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
6. Bid shall be valid up to **03rd February 2023.**
7. All bids shall be accompanied by a "Bid-Security,as in the table below.

| Contract No. | Name of the Contract | Estimated Cost without VAT (Rs.Mn) | CIDA Grade Required (Highways) | Required Bid Security | | Contract period |
|---|---|---|---|---|---|---|
| | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NP/K/RDHS/PSSP/DH-P/2022 | Improvement of Internal Road at Divisional Hospital – Poonagari | 3.21 | C8 or Above | 35,000.00 | 03.03.2023 | 21 days |

8. The pre-bid meeting will be held on 29.11.2022at 03.00 pm at the Office of the Regional Director of Health Services Office, Kilinochchi Kandy Road, Kilinochchi.

**Chairman**
**Regional Procurement Committee**
**Office of the Regional Director of Health Services, Kilinochchi.**
**TP-021 2285719 Fax 021 228 5931**
**Email:rdhskoc@gmail.com/financerdhskoc@gmail.com**




புதுக்குடியிருப்பு உடையார்கட்டு பிரதேசத்துக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிக்கும் நிகழ்வு மூங்கிலாற்றுப் பகுதி யில் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது. உடையார்கட்டு நினைவேந்தல் ஏற் பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிக்கப்பட்டதுடன் தென்னங்கன்றுகளும் வழங்கப்பட்டன. (ச-19)


## இருபத்திமூன்றாம், பதினெட்டாம் நினைவலைகள்



செல்வன்
பாலகிருஷ்ணன் பிரதீபன்
தோற்றம் : 17.04.1981




செல்வன்
சிவநாதன் ரவிசங்கர்
தோற்றம் : 02.02.1981



செல்வன்
சுந்தரலிங்கம் சிவோத்தமன்
தோற்றம் : 23.03.1981



செல்வன்
பூரணமூர்த்தி கந்தர்வன்
தோற்றம் : 11.05.1981



செல்வன்
மரியரட்ணம் குணரட்னம்
தோற்றம் : 04.08.1981

**17.11.1999 : மறைவு** — **17.05.2004**

**இந்நாளில் ஹாட்லியின் மைந்தர்கள் ஆகிய நாம் உங்களை பெருமையுடன் நினைவு கூருகின்றோம்.**

**இன்று 17.11.2022 வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் இன்பர்சிட்டி கடற்கரையில் சுகாதார விதிமுறைகளை பின்பற்றி இடம்பெறும் நினைவு கூரல் நிகழ்வை தொடந்து காலை 8.30 மணியளவில் கல்லூரியில் இரத்தான நிகழ்வும் நடைபெறும்.**

**ஆர்வமுள்ளவர்களை அன்புடன் அழைக்கின்றோம்.**

"ஹாட்லியின் [illegible]" ஏற்பாட்டாளர்கள்.

தொடர்பு : அ.டொமினிக் - 0774 660 [illegible] / சு. [illegible] - 0773 122 198 E-mail : hartleyboys@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வதேச நீரிழிவு தினத்தை முன்னிட்டு, சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் நீரிழிவு தொடர்பான குருதிப் பரிசோதனைகள் சாவகச்சேரி பஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்டது. சந்தைக்கு வந்த பொதுமக்கள், வியாபாரிகள், வர்த்தகர்கள், பயணிகள் உட்படப் பலர் கலந்துகொண்டு பரிசோதனைகளை மேற்கொண்டனர். (ய-9)

## வீரசிங்கம் கட்டடத்தொகுதி முதலாம் மாடி வாடகைக்கு உண்டு

வீரசிங்கம் கட்டட தொகுதியின் முதலாம் மாடி வாடகைக்கு வழங்கப்படும். 3150 சதுர அடி விஸ்தீரணம் கொண்டது. 3 அறைகள். மலசல கூடம். மின்சாரம். நீரவிநியோக வசதிகள் கொண்டது. பாரிய அலுவலகங்கள் நடத்தக்கூடிய தள அமைப் பைக் கொண்டது.

உட்புறம் நவீன வடிவில் பகுதியாக்கம் செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பிக்க விரும்புவோர் பகுதியாக்கம் உள்ளடங்கலாக. பகுதியாக்கம் அகற்றப்பட்ட பின் என இரு வகைகளில் தங்களின் வாடகை தொகையினை குறிப்பிடவும்.

விண்ணப்ப படிவத்தையும். விபரத்தையும் அலுவலக நேரத்தில் ரூபா 20/= செலுத்தி சபையில் பெற்று 30.11.2022 ஆம் திகதிக்கு முன்னதாக கூறுவிலையை சமர்ப்பிக்கவும். (அலுவலக நேரத்தில் கட்டடத்தை பார்வையிட முடியும்.)

தொடர்பு - செயலாளர்.
யாழ் மாவட்டக் கூட்டுறவுச்சபை,
வீரசிங்கம் கட்டடத்தொகுதி 2 ஆம் மாடி,
இல12. கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம்.
021 222 2324

## புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு.
## மீள் கேள்வி அறிவித்தல் - 2022

கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட நிலையங்களை 01.01.2023 இலிருந்து 31.12.2023 வரையான காலப்பகுதிக்கு நடாத்துவதற்காக குத்தகைக்கேள்விகள் கீழ் காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் :-** 17.11.2022 முற்பகல் 9.00 மணி தொடக்கம் 21.11.2022 பிற்பகல் 14.00 மணிவரை (அலுவலக நாட்களில் மட்டும்)
**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி :-** 2022.11.22 மு.ப 09.00 மணி வரை
**கேள்வி திறக்கப்படும் திகதி :-** 2022.11.22 மு.ப. 10.00 மணி

| இல | குத்தகை வகை | மீளளிக்க முடியாத கேள்விப்படிவ கட்டணம் (NBT,VAT நீங்கலாக) | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணம் (NBT,VAT நீங்கலாக) | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (NBT,VAT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | புதுக்குடியிருப்பு உப அலுவலகம். | | | |
| 1. | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை கோழிறைச்சிக்கடை | *2,000.00* | 20,000.00 | 1,730,000.00 |
| 2. | உடையார்கட்டு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | *2,000.00* | 6,000.00 | 463,500.00 |
| 3. | உடையார்கட்டு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | *2,000.00* | 4,000.00 | 333,000.00 |
| 4. | உடையார்கட்டு பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | *2,000.00* | 2,500.00 | 69,664.00 |
| 5. | விசுவமடு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | *2,000.00* | 7,000.00 | 639,000.00 |
| 6. | விசுவமடு பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | *2,000.00* | 10,000.00 | 768,150.00 |
| 7. | மந்துவில் பொதுச்சந்தை | *2,000.00* | 2,000.00 | 29,175.00 |
| 8. | மந்துவில் கோழியிறைச்சிக்கடை (மட்டுப்படுத்தப்பட்டுள்ளது) | *2,000.00* | 2,000.00 | 19,000.00 |
| 9. | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை கருவாட்டுக்கடை(இல-01) | *2,000.00* | 2,000.00 | 32,000.00 |
| 10. | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை கருவாட்டுக்கடை(இல-02) | *2,000.00* | 2,000.00 | 32,000.00 |
| 11. | புதுக்குடியிருப்பு சிறுவர்பூங்கா | *2,000.00* | 2,000.00 | 27,273.00 |
| 12. | புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதி பொது மலசலகூடம் | *2,000.00* | 2,000.00 | 18,182.00 |
| | ஒட்டுசுட்டான் உப அலுவலகம். | | | |
| 1 | கற்சிலைமடு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | *2,000.00* | 2,000.00 | 48,500.00 |
| 2 | முத்துஐயன்கட்டு இடதுகரை பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | *2,000.00* | 2,000.00 | 41,150.00 |
| 3 | கற்சிலைமடு கோழியிறைச்சிக்கடை | *2,000.00* | 2,500.00 | 154,800.00 |
| 4 | ஒட்டுசுட்டான் கருவாட்டுக்கடை(இல-01) | *2,000.00* | 1,000.00 | 2,800.00 |
| 5 | ஒட்டுசுட்டான் ஆட்டிறைச்சிக் கடை | *2,000.00* | 2,000.00 | 27,272.00 |
| | ஒலுமடு உப அலுவலகம். | | | |
| 1 | மாங்குளம் கோழியிறைச்சிக்கடை | *2,000.00* | 3,000.00 | 174,545.00 |
| 2 | மாங்குளம் கருவாட்டுக்கடை | *2,000.00* | 1,000.00 | 2,800.00 |

**நிபந்தனைகள்:**

01. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் மூலப் பிரதியினை **தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் **கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு** பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். இரண்டாவது பிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்.** முல்லைத்தீவு என்ற கேள்வி முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும் இரு கேள்விகளும் கேள்வி திறத்தல் நேரத்திற்கு முன்பு கிடைக்ப்பெறல் வேண்டும்.

02. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது. சித்திகர கேள்விதாரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை **2022.11.22** ஆம் திகதிக்கு பி.ப 2.00 மணிக்கு முன்னர் குத்தகை வைப்பாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ள வேண்டும். மிகுதித் தொகையினை 6 சமபங்குப் படி தை தொடக்கம் ஆனி வரையான காலப்பகுதிக்குள் அவ் மாதம் இறுதித் திகதிக்கு முன்னைய வேலைநாட்களில் செலுத்த வேண்டும். தவறுமிடத்து மாதக் கட்டணத் தொகையின் 10 வீதம் தண்டமும் மேலதிகமாக அறவிடப்படும். மேலதிக விபரத்தினை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

03. கேள்விப்பத்திரத்தினை பெற விரும்புவோர் பிரதேசசபை எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பத்துடன் **தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்திய பிரதி. தாம் வதியும் கிராம சேவையாளரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வதிவிடத்தின் வதிவிட சான்றிதழ் மூலப்பிரதி** ஆகியவற்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.

04. ஏனைய நிபந்தனைகள் உதயன் நாளிதளின் **2022.10.15** ஆம் திகதிய பத்திரிகையில் உள்ள எமது சபை கோள்வி கோரல் நிபந்தனைகளே அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளவும்.

**அ.தவகுமாரன்,**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**புதுக்குடியிருப்பு பிரதேசசபை,புதுக்குடியிருப்பு.**
**2022.11.16.**
**தொலைபேசி இல:-021 229 0847 / 021 229 1023 email-pkipsmullai@gmail.com.**

## அன்னையின் நினைவில் ஆறு ஆண்டுகள்



அமரர் திருமதி **செல்லத்துரை**
## தெய்வானைப்பிள்ளை

**மலர்வு** 13.09.1935 — **உதிர்வு** 17.11.2016

பாலூட்டி தாலாட்டி சீராட்டி வளர்த்த தாயே
நெஞ்சினிலே என்றும் நீங்காமல் நீ இருந்து
எம் நினைவிலே கலந்திருக்கும் நினைவுகள்
என்றென்றும் பசுமையாய் பதிந்திருக்க
மறைந்து ஆண்டுகள் ஆறு கழிந்தாலும்
நெஞ்சிலே நீ இருப்பாய்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

**உங்கள் பிரிவால் வாடும்:**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.**

(cs.cs 1054) (2.6)

## மரண அறிவித்தல்

**தோற்றம்** 27 . 03 . 1957



**மறைவு** 16 . 11 . 2022

## அரியராசா புஸ்பலீலா

கந்தர் மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அரியராசா புஸ்பலீலா நேற்று (16.11.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பையா -கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், அரியராசாவின் அன்பு மனைவியும், அஜந்தன் (AU Lanka), செந்தூரன் (யாழ் / மத்திய கல்லூரி), சிந்தியா ஆகியோரின் பாசமிகு தாயும், காயத்திரி (ஆசிரியை - உமையாள்புரம் அ.த.க. பாடசாலை), சிகாமணி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நித்தேஸ், தேவஸ்மன், ஆதிரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சத்தியேஸ்வரி, திருநாவுக்கரசு மற்றும் புஸ்பராணி, புஸ்பகாந்தி, சரோஜினி, மகேந்திரன், மகிள்ரூபன் (ஜேர்மன்) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**சுரேந்திரன் குடும்பத்தினர்**
**(மருமகன்)**
**077 553 7982**

**232/2, பலாலிறோட்,**
**கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**

(cs 21860) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 03 . 03 . 1962



இறப்பு 15 . 11 . 2022

## திரு.சக்திவேல் பாஸ்கரன்

(Retd Transmission Engineer - Mobitel)

யாழ்ப்பாணம் மண்டைதீவை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் சீனியர் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சக்திவேல் பாஸ்கரன் அவர்கள் நேற்றுமுன்தினம் (15.11.2022) செவ்வாய்க்கிழமை சிவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர் சக்திவேல் அன்னலட்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், அமரர்களான யோகராஜா கலாரூபவதி தம்பதியரின் அன்பு மருமகனும், சசிகலாவின் பாசமிகு கணவரும், தீபிகா (Consultant Virtusa), கீர்த்தனா (Associate Consultant Virtusa), விவேகா (Siddha Medicine UOJ) ஆகியோரின் அன்பு தந்தையும், கிரிசாந் (Engineer Canada), சாயீசன் (Engineer USA) ஆகியோரின் அன்பு மாமனாரும், அமரர் வசந்தி, அமரர் பரணிகரன், ஜெயந்தி (Teacher யாழ் இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமரர் தில்லைநாதன், தாமோதரம்பிள்ளை, அமரர் பரஞ்சோதி, அமரர் தெட்சணாமூர்த்தி, அமரர் சிதம்பரநாதன், காங்கேசபிள்ளை, அமரர் மகேஸ்வரி, புஸ்பவதி, குனேஸ்வரி, தியாகேஸ்வரி, ஜோதீஸ்வரி, ஜெயந்தி, அமரர் பாக்கியலட்சுமி ஆகியோரின் பெறாமகனும், அமரர்களான அன்னலட்சுமி, தயாபரன், அமுதலிங்கம், சிவசம்பு ஆகியோரின் மருமகனும், யோககுமாரி, யோகசக்தி, சிவரூபன் (Canada) ஆகியோரின் மைத்துனரும், அமரர் சிவ பாலன், விக்னேஸ்வரன், பகீரதா (Canada) ஆகியோரின் பாசமிகு சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2022) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப 9.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

40/67, சீனியர் லேன், கலட்டி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 8231022

(CS 21858) 1/6



கிளிநொச்சி - பேராலை சி.சி.த.க பாடசாலை யில் கொய்க்கா கட்டடத் திறப்பு விழா அதிபர் ந.ராமதாஸ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வடக்கு மாகாண மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், கிளிநொச்சி வடக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் க.அ.சிவனருள்ராஜா, பளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் தி.திலீ பன், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ய-159)

# மரண அறிவித்தல்

## திருமதி துரைரெத்தினவதி இரவீந்திரன்

ஓய்வு நிலை ஆங்கில ஆசிரியை - தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி, பருத்தித்துறை, இந்து மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, கொட்டாஞ்சேனை விவேகானந்தா கல்லூரி



தோற்றம் 08.06.1939 மறைவு 14.11.2022

யாழ்ப்பாணம் தொண்டைமானாற்றை பிறப்பிடமாகவும் கொழும்பு கொட்டாஞ்சேனையை வசிப்பிட மாகவும் கொண்டிருந்த திருமதி. துரைரெத்தினவதி இரவீந்திரன் அவர்கள் கடந்த (14.11.2022) திங்கட்கிழமைமட்டக்களப்பில் இறைவனடி சேர்ந்தார் என்ற செய்தியினை மிகுந்தகவலையுடன் அறியத்தருகின்றோம்.

அன்னார் தொண்டைமானாற்றைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு.திருமதி துரைராஜா - இரத்தினாம்பாள் தம்பதிகளின் பாசமிகு சிரேஷ்ட புதல்வியும், வல்வெட்டித்துறையை சேர்ந்த காலஞ்சென்ற திரு.திருமதி கணபதிப்பிள்ளை - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற க.இரவீந்திரன் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற சுகிர்தவதி, லலிதவதி, மானவதி, ரூபவதி, சண்முகபாலன்,சண்முகவரதன், கிருபாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற வீரசாமி, காலஞ்சென்ற குணசிங்கம், தங்க வடிவேல், சிவலிங்கம், ஈஸ்வரி, சுசீலா, மகேந்திரன் மற்றும் காலஞ்சென்ற சத்தியமூர்த்தி, காலஞ்சென்ற நவசோதி, கனகேஸ்வரன், வசந்தகுமாரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.11.2022) வியாழக்கிழமை மட்டக்களப்பு, நாவற்குடாவில் உள்ள அன்னாரின் உறவினர் இல்லத்தில் பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்று தகனக் கிரிகைகளுக்காக மட்டக்களப்பு, கள்ளியங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


தகவல் : குடும்பத்தினர்

306, பழைய கல்முனை வீதி,
நாவற்குடா, மட்டக்களப்பு.

29, ஸ்ரீ சிவானந்த வீதி,
கொட்டாஞ்சேனை,கொழும்பு - 13

(CS 20138) 1-6

# மரண அறிவித்தல்



## கைலாசபிள்ளை பாலசுப்பிரமணியம்

(பாலு மாமா)

காரைநகர் வலந்தலை பெரியமணலை பிறப்பிடமாகவும் களபூமி சத்திரந்தையினை வதிவிடமாகவும் பிள்ளையார் கோயில் வீதி, வெளிக்குளம் வவுனியாவை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட கைலாசபிள்ளை பாலசுப்பிரமணியம் (பாலு மாமா) அவர்கள் கடந்த (14.11.2022) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கைலாசபிள்ளை விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும், கனகம்மாவின் (பாலு மாமி) அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஆறுமுகம் சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சடாச்சரத்தின் பாசமிகு தம்பியும், ஞானபண்டிதன் (கனடா), ஞானமலர் (லண்டன்) ஆகியோரின் அருமை தந்தையும், கருணாதேவி (கனடா), சுந்தரேஸ்வரன் (சிறி - லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சரண், கவின் (கனடா), அருணன், விசாகன், லக்சன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2022) வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப 3.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வெளிக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம் .

077 030 9087
பிள்ளையார் கோவில் வீதி,
வெளிக்குளம், வவுனியா.

தகவல்:
மகன் - ஞானபண்டிதன்

(CS 21860) 1/6

# மரண அறிவித்தல்



## கந்தையா பத்மநேசன்

(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி சிரேஷ்ர முகாமையாளர்)

கோயில் வீதி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் குளங்கரை ஒழுங்கை கொக்குவில் கிழக்கு மற்றும் சம்பியன் ஒழுங்கை கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா பத்மநேசன் நேற்று (16.11.2022) புதன்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம் இரத்தினம்மா தம்பதியரின் மருமகனும், சிவநேசராணியின் (ஓய்வுநிலை ஆசிரியை, திருக்குடும்ப கன்னியர் மடம்) பாசமிகு கணவரும், கௌசல்யா, முகுந்தன் (பொறியியலாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நந்தீஸ், திவாகரி ஆகியோரின் மாமனாரும், அனுசயன், ஆதினி, ஆதிரன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான மங்களாதேவி, தவநேசன் (இறைவரித்திணைக்களம்), சித்திராதேவி, சிவநேசன் (HNB திருகோணமலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரன், திருமதி குணரட்ணம், ஞானேஸ்வரன், சுதந்தி, ஈஸ்வரன், இராஜேஸ்வரன் மற்றும் திருமதி ஜெயபாலன், திருமதி சிவானந்தராஜா, அம்பலவாணர், பரமேஸ்வரி, பிரேமலதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (20.11.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் குளங்கரை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கில் நடைபெற்று, பூதவுடல் மு.ப. 11 மணியளவில் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம் .

குளங்கரை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 21863) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வடமராட்சியில் துர்நடத்தை பொலிஸார் சுற்றிவளைப்பு!

யாழ்ப்பாணம், நவ. 17

பருத்தித்துறையில் அண்மைக்காலமாக வீதிகளில் இடம்பெறும் துர்நடத்தைகளைக் கட்டுப்படுத்தும் முகமாக பருத்தித்துறைப் பொலிஸாரால் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பருத்தித்துறை வீதி, நகர்ப் பகுதி மற்றும் கடைத்தொகுதிகளில் அண்மைக்காலமாக பெண்களுக்கு எதிரான துர்நடத்தை, துன்புறுத்தல் சேட்டைகளில் குழு ஒன்று ஈடுபட்டு வருகின்றமை தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் பல முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் பருத்தித்துறைப் பொலிஸார் விசேட சுற்றிவளைப்பு சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதன்போது கடந்த இரு தினங்களுக்கு முன் 14 பேர் கைது செய்யப்பட்டு சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டனர்.

அத்துடன் நேற்றுமுன்தினம் மின்துண்டிப்பு வேளையிலும் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது இருவர் கைதுசெய்யப்பட்டு அவர்கள் மீது வழக்குப் பதிவுசெய்யப்பட்டுள்ளது என பருத்தித்துறை பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பரிசோதகர் பியந்த அமரசிங்க தெரிவித்தார். (ச-20,26)



# ஆலயத்தில் திருட்டு இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 17

துன்னாலை தெற்கு பூதேஸ்வரன் சிவன் ஆலயத்தில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞர் கடந்த திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டார் என்று நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் பூதேஸ்வரன் சிவன் ஆலயத்தின் கதவு உடைக்கப்பட்டு ஆலயத்துக்குள் இருந்த சமையல் பாத்திரங்கள் மற்றும் மின் உபகரணங்கள் ஆகியன திருடப்பட்டன என்று நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

முறைப்பாட்டுக்கமைய விசாரணை மேற்கொண்ட நெல்லியடிப் பொலிஸார், துன்னாலையைச் சேர்ந்த 22 வயது இளைஞரை சந்தேகநபராகக் கைது செய்தனர்.

அத்துடன் சந்தேகநபரான இளைஞரிடமிருந்து, ஆலயத்தில் திருடப்பட்ட சமையல் பாத்திரங்கள் மற்றும் மின் உபகரணங்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

மேலதிக விசாரணைகளின் பின்னர் இளைஞரை பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-14,26)

# கரும்புள்ளியான் குடிதண்ணீர்த் திட்டம்; ஒதுக்கிய நிதியை மீள வழங்குங்கள்

## பொதுஅமைப்புக்கள் இணைந்து ஜனாதிபதிக்கு கடிதம்

முல்லைத்தீவு, நவ. 17

**முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேசத்துக்குட்பட்ட கரும்புள்ளியானில் உலக வங்கியின் நிதியுதவியில் மேற்கொள்ளப்படவிருந்த குடிதண்ணீர்த் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி கொழும்பு உயரதிகாரிகளால் தென்பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. அதனை மீண்டும் எமது பகுதிக்கு பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

இவ்வாறு 7 பொதுஅமைப்புக்கள் ஒன்றிணைந்து ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளன.

அதில் மேலும் உள்ளதாவது:-

கரும்புள்ளியான் குடிதண்ணீர் விநியோகத் திட்டத்துக்கு உலக வங்கியின் நிதியில் ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இன்றுவரை இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படவில்லை.

இந்தப் பிரதேச மக்கள் வருடந்தோறும் வறட்சிக் காலங்களில் குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்ள முடியாதளவு பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதற்கென ஒதுக்கப்பட்ட குறித்த நிதி தற்போது தென்பகுதிக்கு கைமாற்றப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. இது எமது மக்களுக்கு இழைக்கப்பட்ட பெரும் அநீதியாகும்.

குடிப்பதற்கு பொருத்தமற்ற தண்ணீரை அருந்துவதால் அதிகளவானோர் சிறுநீரக நோய் பாதிப்புக்குள்ளாகின்றனர். இந்தப் பிரதேச சனத்தொகையில் இரண்டு வீதமானோர் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த எண்ணிக்கை வருடந்தோறும் அதிகரித்து செல்கிறது. அத்துடன் எதிர்காலச் சந்ததியினரும் சிறுநீரக நோய் பாதிப்புக்குள்ளாக நேரிடுகிறது.

வறட்சி காலங்களில் தண்ணீருக்காக மக்கள் பெரும் அல்லற்படுகின்ற நிலைமை தொடர்ந்து நீடிக்கிறது. எனவே எமது அவலநிலையைக் கருத்திற்கொண்டு குறித்த திட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதி தொடர்பில் ஆராய்ந்து மீண்டும் எமது பகுதிக்கு பெற்றுத்தர வழிவகுக்கவேண்டும்- என்றுள்ளது.

குறித்த கடிதத்தின் பிரதிகள், நீர் வழங்கல் அமைச்சர், வடக்கு மாகாண ஆளுநர், முல்லைத்தீவு மாவட்டச் செயலர், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் தலைவர் உள்ளிட்டோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (ச-214)

# யானைகளால் நாளாந்தம் வாழ்வாதாரம் துவம்சம்!

## கல்மடு ரங்கன் குடியிருப்பு, நெத்தலியாறு மக்கள் கவலை

கிளிநொச்சி, நவ. 17

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட் பட்ட கல்மடு ரங்கன் குடியிருப்பு மற்றும் தருமபுரம் நெத்தலியாறு ஆகிய பகுதிகளில் யானைகள் உட்புகுந்து காலபோகப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வரும் விவசாய நிலங்களை முற்றாக அழித்துள்ளன என அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த இரு வாரங்களாக காலபோக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வரும் விவசாய நிலங்களை யானைகள் உட்புகுந்து துவம்சம் செய்துள்ளன. அத்துடன் மக்கள் குடியிருப்புப் பகுதிகளிலும் புகுந்து பயன் தரக்கூடிய தென்னை, வாழை உள்ளிட்ட பயிர்களை நாசமாக்குகின்றன. இரவு வேளைகளில் குடியிருப்புகளுள் யானைகள் உட்புகுவதால் உயிர்ப் பாதுகாப்பின்மையும் காணப்படுகிறது.



இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்காமல் அசமந்தப்போக்கையே கடைப்பிடிக்கின்றனர்.

எனவே, எமது பகுதிக்கு மின்சார வேலி விரைவில் அமைத்துத் தர உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர்.

இது தொடர்பில் பிரதேச செயலாளர் தெரிவிக்கையில்,

தற்காலிக பாதுகாப்புக்காக யானை வெடி கிராம அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவற்றை கிராம அலுவலரிடம் மக்கள் பெற்றுக்கொள்ள முடியும் - என்றார். (ச-113)

# சாவகச்சேரி நகரசபைக்கு புதிய உறுப்பினர்

சாவகச்சேரி, நவ.17

சாவகச்சேரி நகரசபைக்கு புதிய உறுப்பினராக நல்லையா சுந்தரலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி நகரசபைக்கு கோயிற்குடியிருப்பு வட்டார உறுப்பினராக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த கனகசிங்கம் தர்சன், உறுப்பினர் பதவியில் இருந்து விலகியதையடுத்து வெற்றிடம் ஏற்பட்டது. அந்த வெற்றிடத்துக்கு பதிலாக நகர சபைத் தேர்தலில் நுணாவில் மத்தி வட்டாரத்தில் போட்டியிட்ட ந.சுந்தரலிங்கம் உதவித் தேர்தல்கள் ஆணையாளரால் புதிய உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அதற்கமைய உறுப்பினர் நியமனக் கடிதத்தை நகரசபைத் தவிசாளரிடம் நேற்றுப் புதன்கிழமை கையளித்துள்ளார். (ஒ-149)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் குற்றங்களைக் கையாள விசேட பொறிமுறைச் சட்டம்!

## ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம்

**கொழும்பு, நவ. 17**

**சிறுவர் குற்றவாளிகளை சட்டத்தின்முன் கொண்டுவருவது தொடர்பில் ஊடகங்களில் அறிக்கையிடும்போது விசேட முறையொன்றை பயன்படுத்த சட்டமொன்றை தயாரிப்பதன் அவசியம் தொடர்பில் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டுகை பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.**

இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தலைமையில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

இதுதொடர்பில் அனுப்பிவைக்கப்பட்ட ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

மில்லேனிய பகுதியில் அண்மையில் இடம்பெற்ற சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அதற்கமைய சட்டமொன்றை தயாரிப்பதன் அவசியம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

சிறுவர்கள் தொடர்பான சம்பவங்களின்போது ஊடகங்கள் மூலம் அவர்களை வெளிப்படுத்தும்போது விசேட முறையொன்றை பயன்படுத்த வேண்டும்.

இல்லையாயின் அது சிறுவர்களின் மனநலத்துக்கும் அவர்களது எதிர்காலத்துக்கும் பாதகமான வகையில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் சிறுவர்கள் மற்றும் பெண்கள் பணியகத்தை வலுப்படுத்துவதன் அவசியம் தொடர்பிலும் இந்தக் கலந்துரையாடலில் வலியுறுத்தப்பட்டது.

அதற்கமைய ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் சிறுவர்கள் மற்றும் பெண்கள் பணியகத்துக்கு ஒதுக்கப்பட்ட அறையொன்றையும் அதில் பணியாற்றுவதற்கு 4 பெண் பொலிஸ் அதிகாரிகளை நியமிக்க வேண்டும்.

அதனை உடனடியாக செயற்படுத்த நடவடிக்கை எடுப்பதற்கு உரிய அதிகாரிகளுக்கு இராஜாங்க அமைச்சர் குமாரசிங்க வலியுறுத்தினார். (ச-இ)

## மோ.சைக்கிள் விபத்தில் நான்கு பேர் காயம்!

சாவகச்சேரி, நவ.17

மோட்டார் சைக்கிள் விபத்தில் நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் சாவகச்சேரியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றது.

இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. விபத்தில் இரு மோட்டார் சைக்கிளிலும் பயணித்த நால்வர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ஓ-14.9)

## கச்சா எண்ணெய் விலையில் சரிவு!

கொழும்பு, நவ. 17

சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை மேலும் குறைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த வெள்ளிக்கிழமை ஒரு பரல் பிரன்ட் கச்சா எண்ணெய் 93.94 டொலராக காணப்பட்டது. நேற்றைய நிலைவரத்தின்படி பிரன்ட் கச்சா எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 92.81 டொலராகப் பதிவாகியுள்ளது. இதே வேளை டெக்சாஸ் இன்டர்மீடியட் கச்சா எண்ணெய் பரல் ஒன்றின் விலை 85.43 டொலராக குறைந்துள்ளது என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்தன. சீனாவின் கச்சா எண்ணெய் தேவை குறைந்தமையே இதற்கு முக்கியமான காரணம் என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### வாகனங்களை...

அடகு வைத்து பணத்தைப் பெற்றுத் தலைமறைவாகும் சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித்துள்ளன என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணம், சுன்னாகம், மானிப்பாய் பொலிஸ் பிரிவுகளில் இவ்வாறான 15 க்கும் மேற்பட்ட சம்பவங்கள் நடந்துள்ளன என்று அறியமுடிகின்றது. ஆயினும் இதுவரை இவ்வாறான சம்பவங்கள் தொடர்பாக சுமார் ஐந்து வரையான முறைப்பாடுகளே பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினமும் இவ்வாறான சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது. 4 நாள்களுக்கு என வாடகைக்கு எடுத்துச் செல்லப்பட்ட வாகனம் ஒன்று 20 லட்சம் ரூபாவுக்குக் அடகு வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாகனங்களை வாடகைக்கு விடுவோர் வாடிக்கையாளர்கள் தொடர்பில் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-26)

### கந்தன்குளம்...

அச்சுதநாயகர் ஜெயந்தகுமார் (வயது -48) என்பவரே உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், மல்லாகத்தைச் சேர்ந்த இவர், கடந்த ஒரு வருடமாக கந்தன் குளத்தில் உள்ள உறவினர் வீட்டில் தங்கியிருந்து அங்குள்ள காணியைப் பராமரித்து வந்தார் என்று கூறப்படுகின்றது. கடந்த 14ஆம் திகதியில் இருந்து இவரைத் தொலைபேசியில் குடும்பத்தினர் தொடர்பு கொள்ள முடியாத நிலையில், மனைவி வவுனியா சென்றுள்ளார். அங்கு கணவரைக் காணாததால் பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்தில் அவர் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டுக்கு அமைய தேடுதல் நடத்திய பொலிஸார், காட்டுப் பகுதியில் அவரைச் சடலமாக மீட்டுள்ளனர்.

அவருக்கு அருகில் நாட்டுத் துப்பாக்கி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் மீட்கப்பட்டு மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ)

### வெளிநாடுகளின்...

நீதியான முறையில் விட்டுக்கொடுப்போடு பிரச்சினையை அணுகுவதற்கு சிங்களத் தரப்புகள் முன்வராத நிலையில் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என்.ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இனப்பிரச்சினையை உக்கிரமடையச் செய்து, நாட்டைப் பற்றி எரிய வைத்த ஒற்றையாட்சி முறையை அகற்றுவது தொடர்பாகச் சிந்திப்பதற்கு ஆளும் கட்சி உட்பட பெரும்பான்மையினக் கட்சிகள் எவையும் தயாராக இல்லை. இந்த நிலைமையில் அரசியல் தீர்வு தொடர்பாகப் பேசுவதற்கு என்ன இருக்கின்றது? சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சமஷ்டி எனப்படும் இணைப்பாட்சி முறையை உறுதியுடன் வலியுறுத்தி நிற்பதைத் தவிர தமிழ்த் தேசியத் தரப்புகளுக்கு இப்போது வேறு தெரிவு கிடையாது.

நீதியான முறையில், விட்டுக் கொடுப்போடு, பிரச்சினையை அணுகுவதற்கு சிங்களத் தரப்புகள் முன்வராத வகையில் பிரச்சினை என்பது தொடர்ந்து நீடிக்கவே செய்யும் [illegible] தமிழர் தரப்பால் [illegible] மட்டத்துக்கு கொண்டு செல்லப்படவேண்டும். அதற்குரிய சந்தர்ப்பம் இதுவாகும் - என்றுள்ளது. (அ-எ-26)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 18.10.2022 அன்று சிவபதமடைந்த எமது குலவிளக்கு

**அமரர் திருமதி கலாவதி பூலோகசிங்கம்**

**(ஓய்வுபெற்ற ஆசிரியை, பகுதித்தலைவர் - யாழ். இந்து மகளிர் கல்லூரி)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று முன்தினம் (15.11.2022) செவ்வாய்க்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (17.11.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து ஏழாலை மேற்கு முத்தமிழ் மன்றத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**("இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்,")**

மேலும்

அன்னாரின் மரணச்செய்தியறிந்து நேரிலும் தொலைபேசியூடாகவும் ஆறுதல் தெரிவித்த உள்நாட்டு, வெளிநாட்டு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் பதாகைகள், மலர் வளையங்கள், துண்டுப்பிரசுரங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இன்றுவரை எமக்குப் பல வழிகளிலும் உதவி புரிந்த நல் உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

**ஏழாலை மேற்கு, ஏழாலை.**

(CS 18994) 1-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்களின்...

மன்னார் மறைமாவட்ட ஆயர் பிடெல்ஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை உள்ளிட்ட குழுவினர் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தனர். அந்தச் சந்திப்பிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இந்தச் சந்திப்பின்போது மன்னார் காணிப் பிரச்சினைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதியிடம் விளக்கமளிக்கப்பட்டன. அவை தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி, அப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார். மடு யாத்திரைக்கு வரும் பக்தர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தருவது தொடர்பிலும் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.
இந்தச் சந்திப்பில் அருட்தந்தை ஜொய்ஸ் பெப்பி சொசாய், அருட்தந்தை அன்ரனி சொசாய் உள்ளிட்ட அருட்தந்தையர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜெயவர்த்தன ஆகியோரும் கலந்துகொண்டனர். (அ-எ-22)

## ஜனாதிபதி...

வழங்கமாட்டார். ஆனால், எங்களுக்கு அதிகாரத்தை வழங்கினால் ஊழல்வாதிகள் அனைவரையும் சிறைக்குள் தள்ளுவோம் -இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.
'நீங்கள் ஊழல்வாதிகளின் கோப்புக்களை வைத்துள்ளீர்கள். ஆனால், ஊழல்வாதிகள் இதற்கு அஞ்சுவதாக இல்லை. அந்தப் கோப்புக்களில் எங்களது பெயர்கள் இருப்பது உண்மை. ஆனால், உள்ளே விடயம் ஒன்றும் இல்லை என்கிறார்கள் 'மொட்டு'க் கட்சி எம்பிக்கள். இது உண்மையா?' என்று கேட்ட கேள்விக்குப் பதிலளித்தபோதே அநுரகுமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஆம்! அவர்கள் அஞ்சமாட்டார்கள். இந்த ஊழல்வாதிகள் எந்த அரசாங்கம் வந்தாலும் அந்த அரசில் போய் ஒட்டிக்கொள்வார்கள். இதனால் அவர்களுக்குப் பாதுகாப்புக் கிடைக்கின்றது. தொடர்ந்து அவர்களது வேலையைச் செய்கின்றார்கள். இவர்கள் தண்டிக்கப்படுவதில்லை. மக்கள்தான் இந்த ஊழல்வாதிகளுக்கு முடிவு கட்டவேண்டும்.
ஊழல்வாதிகள் ஒருபோதும் இன்னோர் ஊழல்வாதிக்குத் தண்டனை வழங்கமாட்டார்கள். மஹிந்தவுக்கு ரணில் தண்டனை வழங்கமாட்டார். ரணிலுக்கு மஹிந்த தண்டனை வழங்கமாட்டார். இந்த விடயத்தில் நாம் எமது பொறுப்பை நிறைவேற்றி இருக்கின்றோம்.
ஊழல்வாதிகளுக்கு ஊழல் புரிவதற்காக வாக்களித்து விட்டு ஏன் திருடர்களைப் பிடிக்கவில்லை என்று மக்கள் எங்களிடம் கேட்பது நியாயமா? எங்களுக்கு அதிகாரத்தை வழங்கினால் திருடர்கள் அனைவரும் உள்ளே இருப்பார்கள். இவர்களுக்குத் தண்டனை கிடைப்பதாக இருந்தால் அது எங்களது அரசாங்கத்தால் மட்டுமே முடியும். அதுவரை எதுவும் நடக்காது. இவர்கள் திருடிக் கொண்டே இருப்பார்கள்.
இந்த ஊழல்வாதிகளின் மத்தியில் அரசியல்வாதிகள், ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்கள், வியாபாரிகள், அரச அதிகாரிகள், பாதுகாப்பு அதிகாரிகள் ஆகியோர் உள்ளனர். சஜித் பிரேமதாஸ ஊழல்வாதிகள் பற்றி பேசுகின்றார். அவரது மேடையில் இருக்கின்ற பாதிப்பேர் ஊழல்வாதிகள். அவரால் எப்படி ஊழலை ஒழிக்க முடியும்?
குழந்தைகளுக்கு பால்மா கிடைக்காமல் போனதும் நாடு கடனில் சிக்கி இருப்பதும் தொழிற்சாலைகள் மூடப்பட்டுக் கொண்டு செல்வதும் மக்களால் மூன்று நேரம் சாப்பிட முடியாமல் இருப்பதும் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதும் இந்த ஊழலால்தான். ராஜபக்ச குடும்பம் ஊழல்வாதிகள் என்று நாம் அன்றே சொன்னோம். இன்று அவர்கள் திருடர்கள்தான் என்று முழு நாடும் சொல்கின்றது.
எனது கையில் பல ஊழல்வாதிகளின் கோப்புக்கள் உள்ளன. எங்களுக்கு அதிகாரத்தை வழங்கினால் அவர்கள் அனைவரையும் சிறைக்குள் தள்ளுவோம் - என்றார். (அ-எ-22)

## முதலாம்வருட...

மட்டக்களப்பு, காரைதீவைச் சேர்ந்த ஆசிரிய மாணவனே உயிரிழந்துள்ளார்.
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் கல்வி பயிலும் முதலாம் வருட ஆசிரிய மாணவர் ஒருவர் காய்ச்சல் காரணமாக தனது விடுதியில் இருந்துள்ளார். தனது சக ஆசிரிய மாணவர்களிடம் உணவு வாங்கி வருமாறு கூறிவிட்டு விடுதியில் படுத்திருந்துள்ளார்.
உணவு வாங்கிக் கொண்டு சக ஆசிரிய மாணவர்கள் அங்கு வந்து பார்த்தபோது காய்ச்சல் காரணமாக அந்த ஆசிரிய மாணவர் அவதிப்பட்டுள்ளார். அவரை உடனடியாக வவுனியா மருத்துவமனைக்குக் கொண்டு சென்றபோதும் அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.
இதேவேளை- உடற்கூற்றுப் பரிசோதனைக்கு பின்னரே உயிரிழப்புக்கான காரணம் தெரியவரும் என மருத்துவர்கள் தெரிவித்தனர். (அ-எ-18-131)

## மக்களின்...

திரண்டு கடற்படை முகாமுக்கு முன்பாக போராட்டம் நடத்தினர். காணி சுவீகரிப்புக்கான நில அளவீட்டு முயற்சிகள் பொது மக்களின் எதிர்ப்பால் இடைநிறுத்தப்பட்டது.
முல்லைத்தீவு, வட்டுவாகலில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான 617 ஏக்கர் காணிகளைக் கடந்த 13 வருடங்களாக இலங்கைக் கடற்படை ஆக்கிரமித்துப் பெரும் படைமுகாமை அமைத்துள்ளது. அந்தக் காணிகளை நிரந்தரமாகக் கையகப்படுத்துவதற்கான முயற்சிகளை கடற்படையினர் முன்னெடுத்துள்ளதுடன், அதற்கான காணி அளவீட்டு நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தனர். பல தடவைகள் காணிகளை அளவீடு செய்ய நில அளவைத் திணைக்களத்தினர் கடற்படையினரால் அழைக்கப்பட்டிருந்த போதும், ஒவ்வொருமுறையும் பொதுமக்களும், காணி உரிமையாளர்களும், மக்கள் பிரதிநிதிகளும் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து காணி அளவீட்டு முயற்சிகளை இடைநிறுத்தியிருந்தனர்.
நேற்றும் காணிகளைக் கையகப்படுத்துவதற்காக காணி அளவீட்டு நடவடிக்கைகளை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. இதற்காக கொழும்பில் இருந்து நில அளவையாளர் குழுவொன்று வருகின்றது என்றும் தகவல் வெளியாகியிருந்தது. அதையடுத்து நேற்று கடற்படை முகாம் முன்பாக ஒன்றுகூடிய காணி உரிமையாளர்கள், பொதுமக்கள், மக்கள் பிரதிநிதிகள் காணிகளைக் கையகப்படுத்தும் முயற்சிக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். மக்களின் தொடர்ச்சியான கடும் எதிர்ப்பால் நேற்றும் காணி அளவீட்டு நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டன. நில அளவையாளர்கள் அங்கு வரவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.
அரசாங்கமும், இலங்கை இராணுவமும் தமிழ் மக்களின் காணிகளை அபகரிக்கும் நடவடிக்கைகளை கைவிடாமல் செயற்படுத்துகின்றன. மக்களின் எதிர்ப்புப் போராட்டங்கள் மூலமே இந்த முயற்சிகள் தடுத்து நிறுத்தப்பட்டு வருகின்றன. நேற்று (நேற்றுமுன்தினம்) யாழ்ப்பாணத்திலும் காணி அபகரிப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டிருந்தது.
'தமிழ் மக்களின் காணிகளைப் பறிக்கும் நடவடிக்கை நிலைமையை மேலும் சிக்கலாக்கும். இராணுவ முகாம்களை அகற்றி பொதுமக்களின் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்' என்று பொதுமக்கள் வலியுறுத்தினர். (அ-எ-19)

## 14 தமிழக...

கடலில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது இவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் தமிழகம், நாகப்பட்டினத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகின்றது.
கைது செய்யப்பட்டவர்கள் விசாரணைக்காக காங்கேசன்துறைமுகத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டனர் என்றும், அவர்கள் உரிய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுவார்கள் என்றும் கடற்படைத் தகவல்கள் தெரிவித்தன. (அ-எ-26-27)

## சாந்தன்...

வார்கள் என்று இந்திய மத்திய உள்துறை அமைச்சகத் தரப்புக்கள் தெரிவிக்கின்றன.
சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட முருகன் (ஸ்ரீஹரன்), றொபர்ட் பயஸ், எஸ் ஜெயக்குமார் மற்றும் சுதேந்திரராஜா என்ற சாந்தன் ஆகிய நால்வரையும் நாடு கடத்த வேண்டும் என்று தமிழக அரசுக்கு மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவு பிறப்பித்துள்ளது.
இந்த நால்வரும் தற்போது திருச்சியில் சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் இலங்கைக்கு நாடு கடத்தப்படுவதற்கு முன்னர் சில சட்ட நடைமுறைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்று அந்தத் தரப்புக்கள் தெரிவித்துள்ளன.
அவர்கள் நாடு கடத்தப்படுவதற்கான காலக்கெடு அல்லது குறிப்பிட்ட திகதி எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. இந்த விடுதலை மற்றும் நாடு கடத்தல்கள் தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சின் மூலம் இலங்கை அரசாங்கத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை - விடுவிக்கப்பட்ட சிலர் இலங்கையைத் தவிர வேறு நாடுகளுக்குச் செல்ல விரும்புகின்றனர் என்று கூறப்படும் நிலையில், அதில் தமிழ்நாடு அரசாங்கத்துக்கு எந்த ஆட்சேபணையும் இருக்காது. எனினும் அது மற்ற நாடுகளின் நுழைவிசைவுகள் கிடைப்பதைப் பொறுத்தது என்று தமிழக அரச அதிகாரி ஒருவரைக் கோடிட்டு இந்திய செய்தித்தளம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (அ-எ-இ)

## மீனவர்...

குருநகரில் நடந்துள்ளது.
அதே இடத்தைச் சேர்ந்த அலோசியஸ் ஜான்சன் (வயது- 40) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார். இவர் 3 பிள்ளைகளின் தந்தையாவார்.
இவர் நேற்று முன்தினம் இரவு மீன்பிடிப்பதற்காக மருமகனுடன் கடலுக்குச் சென்றுள்ளார். இவர் கடலுக்குள் சென்று நீரில் இறங்கி வலை வீசி மீன் பிடித்துள்ளார். அதன்பின்னர் அவர் காணாமற்போயுள்ளார். சிறிது நேரத்தின் பின்னர் அவரைக் காணவில்லை என்று மருமகன் தேடியபோது நீருக்குள் புதைந்த நிலையில் அவர் உயிரிழந்து காணப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.
சடலம் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-எ-26-27)

## "பட்ஜெட்"...

சிங்க வழங்கவேண்டும். இல்லையேல் நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிப்பது என்ற நிலைப்பாட்டில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர் என்று அறிய முடிகின்றது.
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் இன்னும் அமைச்சுப் பதவி கிடைக்காமல் விரக்தியில் உள்ளனர். அவர்கள் தொடர்ச்சியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர். ஆனால், ஜனாதிபதியோ அசைவதாக இல்லை. இன்று நியமனம், நாளை நியமனம் என்று செய்திகள் மட்டும் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. அது இவர்களை ஆறுதல்படுத்துவதற்காக ஜனாதிபதியின் தரப்பு செய்யும் வேலை என்று அறியமுடிகின்றது.
அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவிகள் கேட்டு 12 பேரின் பெயர்களை 'மொட்டு'க் கட்சி ஜனாதிபதியிடம் கொடுத்துள்ளது. ஆனால், ஜனாதிபதி அவர்களுக்கு அமைச்சுப் பதவிகளைக் கொடுப்பதற்கு விரும்பவில்லை என்றும், அந்தப் பட்டியலில் சிக்கலுக்குரியவர்களின் பெயர்களும் இருப்பதால் அவர் இழுத்தடிக்கின்றார் என்றும் கூறப்படுகின்றது.
அதேநேரம், 12 அமைச்சர்களையும் மொட்டுக் கட்சியில் இருந்தே நியமிப்பதற்கு ஜனாதிபதிக்கு விருப்பமில்லை என்றும், அமைச்சுப் பதவிகளைப் பயன்படுத்தி ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்தும் ஏனைய சில கட்சிகளில் இருந்தும் சிலரை வளைத்துப் போடுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காய்நகர்த்தி வருகின்றார் என்றும் உள்ளகத் தகவல்களில் இருந்து அறியமுடிகின்றது.
ஜனாதிபதியின் இந்த முயற்சி சாத்தியமாகும் பட்சத்தில் அவர்களுக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவிகள் கொடுக்கவேண்டி வரும். அதற்காகத்தான் இவ்வாறு இழுத்தடிக்கின்றார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன.
இதை விரும்பாத மொட்டுக் கட்சியின் அந்த 12 பேரும் ஜனாதிபதிக்கு கடும் அழுத்தத்தைப் பிரயோகித்து அந்தப் பதவிகளைப் பெறுவதற்கு வியூகம் ஒன்றை வகுத்துள்ளார்கள். வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிப்பது தான் அந்த வியூகம் என்று சொல்லப்படுகின்றது. வரவு - செலவுத் திட்ட வாக்களிப்புக்கு முன் அமைச்சுப் பதவிகளை வழங்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் எதிர்த்தே வாக்களிப்பார்கள் என்று அவர்களது வட்டாரம் தெரிவிக்கின்றது. (எ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100 குடும்பங்களுக்கு வீட்டுத்தோட்டப் பயிர்கள்

யாழ்ப்பாணம், நவ. 17

யாழ்ப்பாண லயன்ஸ் கழகமும் நல்லூர் வடக்கு சனசமூக நிலையமும் இணைந்து ஜே/257 கிராம அலுவலர் பிரிவிலுள்ள தெரிவு செய்யப்பட்ட 100 குடும்பங்களுக்கு வீட்டுத்தோட்டப் பயிர்கள், மரக்கன்றுகள், இயற்கைப் பசளைகள் என்பன நல்லூர் வடக்கு சந்திரசேகர பிள்ளையார் கலாசார மண்டபத்தில் அண்மையில் வழங்கப்பட்டன. லயன்ஸ் கழகத்தின் மரநடுகைக்குப் பொறுப்பான மாவட்டத் தலைவர் லயன் கு.ஜெயந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மரநடுகை சம்பந்தமான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் இடம்பெற்றது. (ஒ-14-20)

## 4 ஆவது ஆண்டில் 'விதையனைத்தும் விருட்சமே'



கருகம்பனை தமிழ் மன்றமும் சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையமும் இணைந்து சமூகசேவையை மையப்படுத்தி ஆரம்பிக்கப்பட்ட "விதையனைத்தும் விருட்சமே" அமைப்பானது, தனது சமூக நல நோக்கு பயணத்தின் மூன்று ஆண்டுகளை வெற்றிகரமாக நிறைவு செய்து கடந்த சனிக்கிழமை 4 ஆவது ஆண்டில் கால்பதித்துள்ளது. (ஒ-14-27)

## பிளாஸ்டிக் பொருள் மீளுருவாக்கம் தொடர்பான கலந்துரையாடல்

யாழ்.நவ.17

பயன்படுத்திய பிளாஸ்டிக் பொருள்களை மீளுருவாக்கம் செய்யும்தொழில்நுட்பத்தையும், ஆலோசனைகளையும் வழங்குவதற்காகவும், உரிய இயந்திரங்களை வழங்குவது தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கும் இன்று முற்பகல் 11 மணிக்கு பன்னாட்டு முகவர் நிறுவத்தினர் யாழ். வணிகர் கழக பணிமனைக்கு வரவுள்ளனர். ஆர்வமுடையவர்கள் கலந்து கொண்டு பயனடைய முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

DHL துரித கடிதங்கள் பொதிகள் சேவை

▲சகல நாடுகளுக்குமான கடிதங்கள் 4 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
▲11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட சலுகைகள்
▲கனடா 11 Kg - 1200/=

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. Road, Jaffna. 0777 554528

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அழைப்பும்



தோற்றம் 07.05.1951
மறைவு 20.10.2022

கடந்த 20.10.2022 அன்று இறைவனடி சேர்ந்த
எமது குடும்பத் தலைவி

அமரர் திருமதி
### தில்லைவனராசா சுசீலாதேவி

அவர்களின் அந்தியேட்டி நிகழ்வுகள் இன்று (17.11.2022) வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் நாளைமறுதினம் (19.11.2022) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அந் நிகழ்வில் பங்குகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

கேணியடி,
மீசாலை மேற்கு,
மீசாலை. (cs,21837)(2.6)

குடும்பத்தினர்

பணிப்பெண் தேவை

கோப்பாயில் சிறிய குடும்பத்திற்கு சமையலுக்கு பணிப்பெண் உடன் தேவை.

தொடர்புகளுக்கு:
077 8449 707/077 2413 704

களஞ்சியப்படுத்துவதற்கு வீடு வாடகைக்குத் தேவை

பொருட்களை களஞ்சியப் படுத்துவதற்கு ஏதுவான வீடு வாடகைக்குத் தேவை. யாழ். நகரை அண்மித்த பகுதிகளில் இருப்பது விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 482 1969

## மரண அறிவித்தல்



தோற்றம் 05 . 01 . 1953
மறைவு 15 . 11 . 2022

### திருமதி பிரதீபா ஸ்ரீபாலன் (கீதா)

நல்லூர் கோவில் வீதியைச் சேர்ந்த திருமதி பிரதீபா ஸ்ரீபாலன் (கீதா) அவர்கள் கடந்த (15.11.2022) அன்று சிவபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.ஸ்ரீபத்மநாதன் திருமதி சரோஜினி தேவி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், திரு.ஸ்ரீபாலனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திரு.கனகசபாபதி திருமதி நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சுபாங்கன் (Scotland yard, England), சத்யா (Medical Doctor, UK) ஆகியோரின் அன்புத் தயாயாரும், Dr.உஷாவின் அன்பு மாமியாரும், நிஷான், ஐலா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திரு. இராஜீவன் (முன்னாள் வடபிராந்திய முகாமையாளர், கொமர்ஷல் வங்கி), நிரூஜா, யாதவன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலவாணி, Dr. ரவீந்திரராஜ், சுமதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், பிரகதீசன், கவிதாஞ்சலி (சிந்து), Dr.பிரகலாதன், பிரஷாந்தி, அபிநயா, சரண்யா ஆகியோரின் அன்பு மாமியாரும், கௌத்ரிகா, Dr.செல்வாங்கன், அனீஷ் ஆகியோரின் அன்பு பெரியம்மாவும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.439, கோவில் வீதி, நல்லூரிலுள்ள அவரது இல்லத்தில் நாளை (18.11.2022) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திரு.ஸ்ரீ.இராஜீவன் (சகோதரன்)
0777 687821
(CS 21868) 1-6

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



தோற்றம் 07 . 04 . 1942
மறைவு 16 . 11 . 2022

### இராமலிங்கம் பூபாலசிங்கம்

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், யாழ். வண்ணார்பண்ணை காரைக்காட்டு ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் பூபாலசிங்கம் நேற்று (16.11.2022) புதன்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் பூபதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிஐயா கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ஆனந்தலக்ஷ்மியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் (ஈஸ்வரி) அன்புச் சகோதரனும், கிருபானந்தா, பிரபானந்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும், கன்னிகா, பிரதீபா ஆகியோரின் அன்பு மாமாவும், கலையமுதன், தமிழமுதன், லோகப்பிரியா, துசாந், மிதுலா, அபூர்வா ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2022) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் சிவலிங்கப்புளியடி ஒட்டுமடம் வீதி, இல.95இல் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பூ.பிரபானந்தா (மகன்)
077 6960 514
(CS 21871) 1-6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.